அருளிச்செயலும் அண்ணங்கராரியரும்

ஸ்ரீ உ. வே. கு. அ. அக்காரக்கனி அனந்தாழ்வான்.

திருவல்லிக்கேணி நின்ற கருணையங் கடலை வணங்கி வழிபட்டுக் கருங்கடலைக் காணச் சென்றேன். கடற்கரையில் காலில் ஏதோ ஒன்று குத்தியது. குனிந்து எடுத்துப் பார்த்தேன். கிளிஞ்சல்தான் அது. உடனே மனக்கடலில் நினைவலைகள் பொங்கி எழுந்தன. "கடலே! விலைமதிப்பில்லாத இந்தக் கிளிஞ்சல் போன்றவற்றை ஆயிரக் கணக்காக அலைக்கைகளால் வீசி யெறிகின்றாய். ஆனால் விலை மதிக்க வொண்ணாத வெண் முத்துக்களை உனக்குள்ளே... உள்ளே.... உள்ளே பாதுகாத்துப் போற்றிக் கொள்கிறாய்!"—இவ்வாறு நினைக்கையில் மற்றொன்று நினைவில் நிழலாடியது. ஸத்ஸம்ப்ரதாயம் என்னும் ஸாகரம் வையமெல்லாம் விலையாகத் தக்கதொரு நன்முத்தைத் தனக்கென வைத்துக் கொள்ளாது ஸம்ஸாரத்துள்ளோர் பயன் கொள்ளுமாறு (ஏறக்குறைய ஒரு நூறாண்டு) நல்கியிருந்தது. அன்றோ! ஆஹா! "இனம் இனத்தோடு சேரும்! என்பது மெய்யாகி விட்டதே! ஆம் ஸ்ரீகாஞ்சி ப்ரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமி என்னும் அந்த முத்து "முத்தே மணி மாணிக்கமே" என்று போற்றப்பெறும் முகுந்தனைச் சேர்ந்து விட்டது.

ஸ்ரீ ஸ்வாமியை முத்தென்று குறிப்பிட்டேன்? வைரமாகக் கொள்ளுதல் மிகவும் ஏற்கும். பட்டை தீட்டப்பட்டு ஒளிரும் ஒரு பெருவைரம். ஸ்ரீ ஸ்வாமியின் ப்ரதிபை பஹுமுகமானதால் வைரம் என்றே ஸ்வாமியைக் கொள்ளலாம். உபய வேதபாரங்கதராகவும், உபயபாஷா ப்ரவீணராயும், ஸகல பூர்வாசார்ய ஸ்தோத்ர ரஹஸ்ய க்ரந்த தத்வ்யாக்யான கூடார்த்த தத்வஜ்ஞராகவும், லேக பாஷண சதுரராகவும், ஸகல பூர்வாசார்ய ஸமுதாயாவதார பூதராகவும் ஸௌசீல்ய நிதியாகவும்......எழுந்தருளியிருந்த நம் ஸ்வாமியின் பெருமை அடியேன் சிறிய ஞானத்தன் சொல்லுந் நீர்த்தன்று. ஆயினும் பெரியோர் தம் [illegible] மனத்தையே பற்றுசாகக் கொண்டு திவ்ய ப்ரபந்தத்தில் ஸ்வாமியின் ஈடுபாடு பற்றியும் அந்த அருளிச்செயல் தன்னை அவர்க்கு நன்கு காட்டிக் கொடுத்த திறம் பற்றியும் ஒரு சிறிது அநுபவித்து ஸத்தை பெறவெண்ணி எழுதத் தொடங்குகின்றேன்.

பெரிய திருமொழி (5.8.7) வியாக்கியானத்தில் "ஓதுவாய்மையும் உவனியப் பிறப்பும் உனக்கு முன் தந்த அந்தணனொருவன் என்றவிடத்து" முற்பட த்வயத்தைக் கேட்டு இதிஹாஸ புராணங்களையும் அதிகரித்துப் பரபக்ஷ ப்ரதிக்ஷேபத்துக் குடலாக ந்யாய மீமாம்ஸைகளும் அதிகரித்துப்போது போக்கும் அருளிச் செயலிலேயாம் நம்பிள்ளையைப்போலே என்று வ்யாக்யான சக்ரவர்த்தியான பெரியவாச்சான்பிள்ளை ஸாதித்தருளுகிறார். ஜகதாசார்யரான நம்பிள்ளைக்கு அப்பேராசிரியர் இட்டுள்ள அருமொழிகள் ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதியான நம் ஸ்வாமி திறத்தும் பொருந்துவனவே. ஆம்! ஆசார்யர்களுடைய காலத்தில், கண்ணனெம்பெருமானுக்கு உபாத்யாயராக இருந்த ஸாந்தீபனி முனிக்கு ஒப்புமை கூற நம்பிள்ளை தக்கவராயிருந்தார்; நம் காலத்தில் நம்பிள்ளைக்கு நம் ஸ்வாமி ஒப்பாகும் தகுதி பெறுகிறார்.

திவ்ய ப்ரபந்தத்தை அதன் வியாக்கியானங்களுடன் வாசோ விதேயமாகக் கொண்டவர் நம் ஸ்வாமி. பாசுரத்தின் தொடக்கத்தைச் சொல்லி முழுமையாகச் சொல்லப் பணித்தாலும் திசைமுகனுகாது சொல்பவர் சிலரே. (திசைமுகன்-ஒன்றும் தோன்றாது திசை தோறும் நோக்குமவன் எனக்கொள்க) ஓர் உண்மை நிகழ்ச்சி அடியேன் கேட்டதுண்டு. புகழுநல்லொருவனென்கோவில் பரீக்ஷை. "பாலென்கோ சொல்லப்பா" என்கிறார் பரீக்ஷகர். விடையிறுக்கிறான் வித்யார்த்தி: "பாலெங்கோ நூலெங்கோ வாத்தியார் எங்கோ நான் எங்கோ"—கதைநம்மை எங்கோகொண்டு போய்விடும். போதும் இந்த வ்யதிரேக த்ருஷ்டாந்தம். நம் ஸ்வாமி கொடுத்த பரீக்ஷை அதி விலக்ஷணமானது. திருவல்லிக்கேணி வேதவேதாந்த வர்த்தினி ஸபையில் பரீக்ஷை. பெரிய வித்வான்கள் பரீக்ஷகர்கள். நம் ஸ்வாமி இளைஞர். விடையிறுக்க இளையாத இளைஞர். எதிரே கூர்க் கத்தியை வைத்து விட்டு ப்ரதிக்ஞைசெய்கிறார். "உடனுக்குடன் விடையிறுக்கத் தவறினால் இக் கத்தியால் என் நாவை அறுத்துக்கொள்ளக் கடவேன்"—என்று கத்தி நாவைத் தீட்டிக் கொண்டது. ஆனால் கேள்விகளைத் தொடர்ந்து ஸ்வாமியின் விடைகள் வந்ததும்—பாவம் அந்தக் கத்தி—தன்னுடைய கூர்மையை ஸ்வாமியின் கூர்த்த மதிக்குக் காணிக்கையாக்கிவிட்டுத் தோல்விக்கு வெட்கி முகங் காட்டாதே மறைந்து கிடந்தது. இதுதான் ஸ்வாமியின் புத்திக்குத் தோற்ற கத்தியின் கதை. சில கேள்விகளைத்தான் பார்ப்போமே. "தொழுதுமுப்போதும்" என்னும் பாசுரத்தை எழுதிக் காட்டுமாறு பரீக்ஷகர் கூறவும், அவர்தம் கருத்தையுணர்ந்து அப்பாசுரத்தின் குறிப்பிட்ட பகுதியை மட்டும் எழுதிக் காட்டுகிறார் ஸ்வாமி. "பார்க்கடல் வண்ணனுக்கே" என்று. அருளிச்செயலில் பலவிடங்களில் பாற்கடல் வருகிறது. ("பாற்கடலும் வேங்கடமும்" முதலியன) க்ஷீரஸமுத்திரம் என்னும் பொருளில் அவ்வாறு வரும். ஆனால் ப்ரக்ருத பாசுரத்தில் "பார் சூழ்ந்த கடல் போலேயிருக்கிற வடிவை..." என்று வியாக்கியானமாதலால் 'பார்க்கடல்' என்று எழுதிக் காட்டினார் ஸ்வாமி. மற்றொரு கேள்வி. எம்பெருமானுடைய கழல்களுக்குக் கமலத்தை ஆழ்வார்கள் ஒப்பாக்குவதுண்டு. ஆனால் கமலபந்து (கதிரவன்) உவமையாக்கப்பட்டிருக்கும் பாசுரத்தைக் கூற முடியுமா என்று பரீக்ஷகர் கேட்க ஸ்வாமி, "சொல்ல மாட்டேன்" என்றார். "சொல்லமாட்டேன் அடியேன் உன் துளங்கு சோதித் திருப்பாதம், எல்லையில் சீர் இளஞாயிறு இரண்டுபோல் என்னுள்ளவா" (திருவாய்மொழி (8-5-5) என்ற பாசுரம் தக்க விடையன்றோ.

திருவல்லிக்கேணி வர்த்தினியில் நடந்த இவ்வகையான பரீக்ஷைகள் அநேகம், அநேகம்.

கவியின் பொருள் தெரியப் பாரினில் சொன்னார்

திருவாய்மொழியை ஈன்ற முதல் தாய் சடகோபன்; வளர்த்த இதத் தாய் இராமாநுசன். மூன்றாவதாக ஒரு புதுத் தாயையும் பெற்றது திருவாய்மொழி. திருவாய்மொழி என்றது நாலாயிரத்துக்கும் உபலக்ஷணமாகக் கொள்க. அருளிச் செயலுக்குப் பெருமை சேர்த்தவர் நம் ஸ்வாமி. பரமகாருணிகரான பெரியவாச்சான் பிள்ளை முதலானோர்தம் வியாக்யானங்கள் உள. ஆயினும் அவை பேரறிஞர்கட்கே நிலமாகக் கூடியன. எனவே அவற்றை ஆதாரமாகக் கொண்டு ஸ்வாமி நல்கிய "திவ்யார்த்த தீபிகை" என்னும்

உரையாவர்க்கும் ஒருங்கே இன்பம் பயக்கு மதாய் விளங்குவது என்பது அறிஞர் கருத்து. "செந்தமிழ்ச் செல்வர்" என்னும் விருது இதுபற்றியே நம் ஸ்வாமியை வந்தடைந்தது. ஸ்வாமி அருளிச்செயலை அகிலமெங்கும் பரப்பியதை ஒரு கட்டளைக் கலித்துறைச் செய்யுளாக்கி விவரிக்க விழைகின்றேன்.

''பேரிதழ் நூறுடைப் பங்கயமாம்
திருவாய்மொழியைச்
சேரனம் நாத நல் யாமுனராகுவர்
செப்பிலதன்
சாரங்கொள் தாமது வாய் வண்டு
மாமுனி சால்புடையோன்
சீரிளஞாயிறண்ணங்கர்தாம்
காற்றென்றியம்புவனே''
(அண்ணங்கர் அருளந்தாதி 3)

இதன் கருத்துச் சுருக்கம் வருமாறு: தாமரை "நூற்றிதழ்கொள் அரவிந்தம்" எனப்பெறும். திருவாய்மொழியும் நூறு பதிகங்களாகிய இதழ்களைக் கொண்டதொரு பங்கய நறுமலரே. அரவிந்தத்தை அன்னங்கள் அடைதல் இயல்பேயன்றோ! பரமஹம்ஸர்களான ஸ்ரீமந்நாதமுனிகள் ஆளவந்தார் போன்றோரை அன்னமென்பர் ஆன்றோர். அவர்கள் திருவாய்மொழியில் ஈடுபட்டது அனைவரும் அறிந்ததே. தாமரை எனின் வண்டு சேராதோ என்னில் கேண்மின். விசதவாக் சிகாமணிகளான மணவாளமாமுனிகள் வண்டாகக் கொண்டாடப்படுவர். வரவரமுனி சதகத்தில் மேலும் வண்டு ஸாரத்தைக் கிரகிக்கும் தன்மைத்து. திருவாய்மொழியின் ஸாரமாகத் திருவாய்மொழி நூற்றந்தாதி அருளிச்செய்தமையால் வண்டென்னப் பொருத்தம் மிகவுண்டு. செங்கமலம் வெங்கதிரோற்கல்லால் அலராதே! இத் திருவாய்மொழித் தாமரையை அலர்த்திய அஞ்சுடரோன் யாவன் என்னில், "ராமாநுஜ திவாகரரே" என்னலாம். மலரை அலர்த்துவதாவது உரைகள் ஏற்பட்டு உட்பொருள் விளக்கம் ஏற்படுவதைக் குறிக்கும். "எதிராசர் பேரருளால்" என்றது திருவாய்மொழியின் ஆறாயிரப்படி வியாக்கியானத்துக்கு மட்டுமன்றி மற்ற வியாக்கியானங்களுக்கும் பொருந்தும். இனி சுவாமியின் தொண்டைக் கேண்மினோ "திசிதிசி கிரபேக்ஷஸ்தாவகீநம் விஶ்ருண்வந் பரிமள மயமந்யோ பாந்தவோ கந்தவாஹ:" என்றான் பண்டிதராஜன். மலரின் மணத்தைப் பரப்பும் காற்று. நம் ஸ்வாமியும் அருளிச்செயலின் புகழை வையகமெங்கும் பரப்பியுள்ளார். தமிழிலும் வடமொழியிலும் (வடமொழியில் பாதிக்குமேல்) ஸ்வாமி தாமே உரை வரைந்துள்ளார். இவ்விரு மொழி யறியாத பலரும் உய்ய வேண்டி ஹிந்தி பாஷையில் ஸ்ரீமான் உ.வே. தி.அ. அக்காரக் கனி. ஸம்பத் குமாராசாரியர் ஸ்வாமி மூலமும், தெலுங்கில் ஸ்ரீமான்கள் உ. வே. N. பக்தவத்ஸலமையங்கார் ஸ்வாமி, மற்றும் உ. வே. (Bapatla) திருவேங்கடராமாநுஜாசார்யஸ்வாமி மூலமும் மொழிபெயர்ப்பு செய்வித்து வெளியிட்டுள்ளார். ஸ்ரீமான் உ.வே. S. ஸத்யமூர்த்தி ஐயங்கார் ஸ்வாமி (திருவாய்மொழி முழுமையாக) எழுதியுள்ளார். ஸ்வாமியின் தீபிகையை அடியொற்றியதே யது. எனவே உலகமெங்கும் அருளிச்செயல் மணம் கமழ வழி வகுத்தவர் நம் ஸ்வாமியாகிறார்.

திருப்பாவைக்குப் பலவுரைகள் தந்து உரைகடந்த புகழ் எய்தி நிற்பவர் நம் ஸ்வாமி. திருப்பாவைக்குத் தீபிகையுரை, திருப்பாவை நறுமணம், சங்கத் தமிழ் மாலை முப்பது. திருப்பாவை ஜீயர் என்று பற்பல வகைகளால் அமுது வழங்கியவர் ஸ்வாமி. இதைத்தான் ஸ்வாமி பற்றிய எழுகூற்றிருக்கையில்,

"... ... ... முக்கோல்
முனிவன் போற்றிடு நாலா யிரத்துள்
தனிச்சீர் பெற்றெளிர் ஐயா றதன் பொருள்
ஐயந்திரிபற நானில முணர்கென
முந்நீர் வருநல் வமுதாய் வழங்கினே''

என்று குறிப்பிட்டேன் அடியேன். இவ்வாறு பல்வகையாலும் அருளிச்செயலைப் பரப்பியவர் ஸ்வாமி.

கல்வி வாய்க்கப் பெற்றார்

திருவாய்மொழி (1-10-11) "தணிவிலர் கற்பரேல் கல்வி வாயுமே" என்றவிடத்து ஈடு ". இதுக்குப் பலமாகக் கைங்கர்யத்தை இதுதானே தரும்" என்று. தேவப்பெருமாளுக்கு அருளிச்செயல் கைங்கர்யம் செய்வதையே ஜீவாதாரமாகக்கொண்டவர் ஸ்வாமி. முற்ற மூத்துக் கோல் துணையாக்கொண்ட காலத்தும் தேவப்பெருமாள் இயல் கோஷ்டியை விட்டவரல்லர். வானுலகம் தெளிந்தே ஏறும் வரை வரம் தரும் மாமணி வண்ணனுக்குத் தொண்டுபூண்டமுதமுண்டவர். வெளியூர்களில் (உபந்யாஸ, உத்ஸவ ஸேவைகளை முன்னிட்டு) எழுந்தருளியிருப்பினும் தேவப்பெருமாள் புறப்பாடென்றால்—அது ஸாதாரண பஞ்சபர்வப் புறப்பாடாகத்தான் இருக்கட்டுமே—தவறாது கோஷ்டியை அலங்கரித்து மீண்டு எழுந்தருள்வர். திருப்பல்லாண்டு, திருமொழி தொடக்கங்கள் என்றால் ஒரு தனி உத்ஸாஹம். ஸ்வாமி "ஸ்ரீசைலேச தயாபாத்ரம்" என்று கம்பீரமாகத் தொடங்கும்போது அந்த ஸ்வர வைகரியில் - யாவரும் ஈடுபடுவர். வேணுகானத்தில் ஈடுபட்டவர்களுள் குழலூதிய கண்ணனும் ஒருவனாயிருந்தான் என்று ஸ்ரீபராசர பட்டர் ஸாதித்தது போல ஸ்ரீ ஸ்வாமி தாமும் அதில் ஈடுபட்டு விடுவார் எனின் அது மிகையாகாது. வெளியூர்க்குப் பெருமாள் எழுந்தருளும் சித்ரா பௌர்ணமி போன்ற உத்ஸவங்களிலும் தவறாது அநுவயித்தவர் நம் ஸ்வாமி. இவ்வாண்டும் தேவப்பெருமாளுடைய ப்ரஹ்மோத்ஸவத்தில் சிற்றஞ் சிறுகாலே நீராடிப் பன்னிரு திருநாமம் மின்னிட எழுந்தருளிக் கோஷ்டியை அலங்கரித்தது வாசாமகோசரம்.

அசுரரை அவித்தார்; அமரரை அளித்தார்.

அருளிச் செயலுக்கு உரை எழுதுவதிலும் உபந்யாஸங்கள் செய்வதிலும் மட்டுமன்றி அவ்வப்போது உலகில் எழும் அசுரப் பூண்டு போன்ற தீய கருத்துக்களைக் களைந்தொழிப்பதிலும் முன்னிற்பவர் ஸ்வாமி. அருளிச்செயல் மீது சாற்றடிக்கப் பொறாதவர் ஸ்வாமி எனலாம். சில நிகழ்ச்சிகளை மட்டும் குறிப்பிடுகின்றேன். மதுரையில் (நம்முடைய தென்மதுரையே தான்) பெருமாள் ஸன்னிதியில் ஸ்ரீஸ்வாமியின் உபந்யாஸம். சிறிய திருமடலை அநுபவித்தும் அநுபவிப்பித்தும் போருகிறார் ஸ்வாமி. "காரார் புரவியேழ் பூண்ட ....தொன்றுண்டே" என்பதை விவரிக்கிறார். சூரிய மண்டலத்தைப் பிளந்து கொண்டு சென்று பரமபதத்தையடைந்து அங்கு ஆராவமுதத்தை அநுபவிப்பதாகச் சொல்வது வெறுங்கட்டுக்கதை - என்பது விவரிக்கப்படுகிறது. அதாவது அர்த்தவாதம் என்பதை விவரிக்கிறார். அர்ச்சாவதாரத்தின் ஏற்றத்தை இசைக்கப் புகுந்த ஆழ்வார் மோக்ஷ புருஷார்த்தத்தைச் சிறிது தாழ்த்திப் பேசுகிறார் என்று இதனை உணரப்பெறாத சிலர் "ஆழ்வார்கள் மோக்ஷமில்லை என்று நாஸ்திகவாதம் செய்கிறார்கள்" என்று தூஷிக்கப் புக, உடனே அவர்களை வேதத்தில் "கோஹித்த வேத யத்ய முஷ்மிந் லோகே அஸ்தி வா ந வேதி" என்று (பரலோகம் என்று ஒன்று உண்டோ

''இல்லையோ, யார் கண்டார்) வேதம் கோஷிப்பதை எடுத்துக் காட்டி அது போல்தான் ஆழ்வார் பாசுரமும் என்று நன்கு தெளிவாக்கினர். மற்றொன்றுங் கேண்மின். புன்மையர்தம் பொய்யுரைகளை மாய்க்கவே 'த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வம்' என்னும் நூலையும் ஸாதித்தார். இவையெல்லாம் விரிப்பிற் பெருகும். 'வரலாற்றில் பிறந்த வைணவம்'' என்னும் அபத்துச் சுவடிக்கும் உடனே தக்க மறுப்பு வெளியிட்டார்.

உள்ளத்திருத்துவோம் பாடத்திருத்தமே :

பாட பேதம் என்பது புகாத சாஸ்த்ரமே இல்லை எனலாம், அருளிச் செயலிலும் அபத்த பாடங்கள் மலிந்த காலத்து பொருத்தமான விளக்கங்களுடன் சுத்த பாடத்தைக் காட்டியருளியவர் நம்ஸ்வாமி. ஸ்வாமி பல தடவை ஸாதித்ததுண்டு— ''நான் தேவப்பெருமாள் (புறப்பாடுகளில்) இயல் கோஷ்டியை இழந்தது கிடையாது. அக் கோஷ்டியை ஸேவித்ததும் கிடையாது'' என்று. இதில் வியப்பொன்றுமில்லை. இது முரண்பாடன்று. கோஷ்டிக்குத் தாமதமாக வந்தால்தானே கோஷ்டியை ஸேவிக்க வேண்டி வரும். தொடக்கத்திற்கே தாம் எழுந்தருள்வதைச் சமத்காரமாக ஸ்வாமி குறிப்பிட்டவாறு இது. அதுபோல ஸ்வாமி கோஷ்டியை இழந்ததில்லை. கோஷ்டியில் ஸ்வாமிகளைக் (கண்ணால்) ஸேவித்ததுமில்லை'' என்றும் சொல்லலாம் என்று அடியேன் கருதுவதுண்டு. எற்றுக்கெனின்

''கூட்டங்கள் தோறும் குருகைப்
பிரான் குணம் கூறுமன்பர்
ஈட்டங்கள் தோறும் இருக்கப் பெற்
றேம் இருந்தெம் முடைய
நாட்டங்கள் தோறும் புனல் வந்து
நாலப் பெற்றேம்''

என்று சடகோபரந்தாதியிற் கண்டபடியே ஆழ்வார்கள் ஈரச்சொல்லில் ஈடுபட்டுக் கண்ணீர் பெருக நிற்பதால் அக்கண்ணீர் கோஷ்டியை ஸேவிக்க விடாதன்றே அர்த்தாநுஸந்தானம் நிகழ்ந்து வந்த தான் ஸ்வாமி பல பாடங்களைத் தெ வாக்கமுடிந்தது என்பதற்காகவே இ குறிப்பிடுகிறேன். ஸ்வாமி காட்டு பாடத்திருத்தங்களுள் சிலவே கே மின். கண்ணன் ஆனையொன்றைக் தான் மற்றோரானையை மாய்த்தான் ஸ்வாமியோ ஒரு பாசுரத்தில் 'ச்' என் எழுத்தைச் சேர்த்தார். (சேர்த்தார் எ பதும் தவறு. இருந்த பாடத்தை உண தினர் என்க). மற்றொரு பாசுரத்தி தவறுதலாக ஓதப்பட்டுவந்த 'ச்' என் எழுத்தை நீக்கினர். விளக்குகிறே இதனை. சிறிய திருமடலில் ''செங்குறிஞ்சி தாரார்'' என்ற விடத்து ஸ்வாமியி தீபிகை யுரையை எடுத்துக் காட்டுதும்,

''செங்குறிஞ்சித்தாரார்'' என்ற வா யத்தில் 'நறுமாலைச் சாத்தற்கு', என் பாட மோதவேண்டியதை விட்டு 'ந மாலை சாத்தற்கு' என்று தப்பான பா ஓதி வந்தனராகையால் இவ்வாக்கிய தின் பொருளை உள்ளபடி அறியாதொழி தனர் பலர். 'சாஸ்தா' என்ற வடமொ 'சாத்தன்' எனத் திரிந்து கிடக்கிறதெ பதை யறியாமல் 'செங்குறிஞ்சித்தாரா நறுமாலை சாத்திக் கொள்ளுகிறவனு என்று கற்றறிந்த பல பெரியோர்களு பொருள் சொல்லக் கேட்டிருக்கிறே அங்ஙனன்று; செங்குறிஞ்சித்தாரார் ந மாலையையுடைய, (சாத்தற்கு) சாஸ் என்று ப்ரஸித்தமான தேவதாந்தர திற்கு என்று உண்மைப்பொருள் உண சாத்தன்+கு சாத்தற்கு. இவ்வகை பொருளில் மாலைச்சாத்தற்கு என்றே பாட மோதவேண்டும். அமர கோசத்தி ஸர்வஜ்ஞஸ்ஸுகதோ புத்த: என் தொடங்கி, முநீந்த்ர: ஸ்ரீகநச்சாஸ்தா என்று புத்த தேவதைக்குப் பெயர் படிக்கப்பட்டுள்ளமை காண்க.''

திருப்பாவையில் 'வையத்து வாழ்வீர் காள்' என்னும் இரண்டாம் பாசுரத்தி

'தீக்குறளைச் சென்றோதோம்' என்று தவ றான பாடத்தைப் பலரும் புகுத்தி, திருப் பாவைக்கு மாசு கற்பிக்கையில் 'குறளை' என்ற சொல்லை விளக்கி, 'குறளை சென் றோதோம்' என்ற பிழையற்ற பாடத்தை உணர்த்தியவர் ஸ்வாமி.

திருமாலையில் ஓரிடம் காட்டுதும். பெண்ணுலாஞ் சடையினானும்'' என்னும் (44) பாசுரத்தில் ''கண்ணறாவுன்னை'' என்றும் ''கண்ணுறா வுன்னை'' என்றும் பாடங்கள் வழங்கும், ஸ்வாமி இங்கு ஆராய்ச்சி செய்து ''கண்ணறாய்'' என் பதே பிழையற்ற பாடம் என்று காட்டு கிறார். கருணையற்றவன் என்னும் பொருளதான கண்ணறை என்னும் சொல் விளியேற்கையில் 'கண்ணறாய்' என்றாகும் என்று விவரணமும் விபுல மாகச் செய்துள்ளார்.

பெரிய திருமொழியில் ஓரிடம் காழிச் சீராம விண்ணகரப்பதிகத்தில் இரண் டாம் பாசுரத்தில் ஆராய்ச்சி செய்து, ஓரெழுத்தினால் நாலெழுத்து வீண்'' என்று கட்டுரையொன்று வரைந்துள்ளார். அதா வது ''தொல்குருகு சினையென்னச் சூழ்ந் தியங்க எங்கும்'' என்ற பாடம் வழங்கி வருகிறது. இங்கு 'எங்கும்' என்னும் பதம் இருக்க வேண்டுமாயின் 'சினையென்ன' என்றிருத்தல் கூடாது. 'சினையென' என்றே வரவேண்டும் என்று காட்டி யுள்ளார்.

ஸ்வாமி ஸேவிக்கும் அழகே தனி. ''சீதக் கடல் உள் அமுதன்ன தேவகி'' ''ஆவி உள் . . குளிர'' என்று முகந்து கொண்டருளிச்செய்வது வழக்கம்.

அன்றாட வாழ்விலும் அருளிச்செயல் மணம் சுவாமியின் திருவாக்கிலிருந்து வரும். வார்த்தைகள் எல்லாம் அருளிச் செயல் மயமாகவே இருக்கும். ஆப்தர் கட்கு எழுதுகையில் ''ஒரு நாள் காண வாராயே'' என்பது போன்ற அருளிச் செயல் சந்தைகள் காணப்படும். ''அருளிச் செயலில் டைமன் (Diamond) உண்டு, சொல் பார்க்கலாம்'' என்பர். ''துளங்கு நீண் முடி . . . . தொண்டைமன்னவன்'' என்று கூறினால் பூரிப்பர் ஸ்வாமிக்கு மிக வும் ஆப்தராயிருந்த ஒரு ஸ்வாமி தம் தேவியாரை இழந்த போது ஸ்வாமி அவர்க்கு ஆறுதலாக ஒரே ஒரு வரி (அரு ளிச்செயல் சந்தை தான்) ஸாதித்தார். ''யாமுற்றதுற்றாயோ'' என்பது தான் அது.

இவ்வாறு அருளிச்செயலே ஊணாக உயர்மூச்சாக எழுந்தருளியிருந்த ஸ்வாமி திருநாமமும் கைங்கர்யங்களும் அருளிச் செயல் உள்ள வரை நிலைத்து நிற்கும் என்பதில் ஐயமொன்றில்லை.

''பாலப் பருவத் தேமுதலாப்
    பார்புக ழேடு படர்ந்ததுவாம்
சாலப் பணியாந் தேன்கொண்டு
    சகமே போற்ற மிளிர்ந்ததுவாம்
சீலப் பெருஞ்சீர் அண்ணங்கர்
    சீமா னெனப்பேர் பெற்றதுவாம்
காலக் கனலில் கருகாமல்
    கடிமா மலரென் சென்னியதே.

(கருத்துச் சுருக்கம்) ஸ்ரீஸ்வாமியை ஒரு மலராக உருவகித்துள்ளேன் இதில். மலர் ஏடுகள் (இதழ்கள்) உடையதா யிருக்கும், ஸ்ரீஸ்வாமி ஸ்ரீராமாநுஜன், (தெலுங்கு, தமிழ்) வைதிக மனோஹரா (இந்தி, வடமொழி) ஆகிய இதழ்களை (சஞ்சிகைகளை) உடையராயிருந்தார், மல ரில் மது இருக்கும். ஸ்வாமியிடம் கைங் கர்யம் என்னும் தேன் திகழ்ந்தது. காலக் கனலில் கருகாத ஸ்ரீமான் உ. வே. அண் ணங்க ராசாரியர் ஸ்வாமி என்னும் மலர் அருளிச்செயல் என்னும் மணம் வீசுவ தாய் எமது சென்னிக்கு அணியாய்டுக.]

குறிப்பு:—ஆசார்யச்ரேஷ்டரை மலராக உருவகித்ததற்கேற்ப அம்மலரை அநுபவிக்கும் இக்கட்டுரை அறுகால சிறுவண்டாக (ஆறு பகுதிகளாக) அமைந்துள்ளது.

ஆழ்வார்கள் வாழி !
    அருளிச்செயல் வாழி !!
        தாழ்வாதுமில் குரவர்தாம் வாழி!!!